


# 25.08.2026 செய்திகள்

## 10 ஆண்டுகளை நிறைவு செய்த யுபிஐ சேவை

- 2016, ஆகஸ்ட் 25-ஆம் தேதி இந்தியாவில் யுபிஐ சேவை அறிமுகமானது. இதையடுத்து, 2016-17 காலகட்டத்தில் 1.78 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இது 2025-26-இல் 24,162 கோடி பரிவர்த்தனைகளாக உயர்ந்து 13,000 மடங்கு அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்தது.

» மாதாந்திர சராசரி பரிவர்த்தனை உயர்வு

- குறிப்பாக 2026-ஆம் ஆண்டு யுபிஐ பரிவர்த்தனையின் சாதனை மைல்கல் ஆண்டாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் முதல்முறையாக 2026, மே மாதத்தில் 2,320 கோடி யுபிஐ பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளன.
- இதன் தொடர்ச்சியாக ஜுலையில் 2.366 கோடி பரிவர்த்தனைகளுடன் 10 ஆண்டுகளில் இல்லாத வகையிலான சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

» ஐஎம்எஃப் அங்கீகாரம்

- 2016-17-இல் 44 வங்கிகள் மட்டுமே யுபிஐ சேவையில் இணைந்த நிலையில், 2025-26-இல் இது 703 ஆக உயர்ந்தது.
- 2025-26-ஆம் நிதியாண்டில் மட்டும் 24,162 கோடி பரிவர்த்தனைகள் நிகழ்ந்துள்ளன.
- இந்தியாவின் எண்ம பொது உள்கட்டமைப்பின் முதுகெலும்பாக விளங்கும் யுபிஐ சேவை, எண்மப் பொருளாதாரத்தில் வியாபாரிகள், வணிகர்கள் என அனைவரும் பங்குபெறும் பெரும் தளமாக உருவெடுத்துள்ளது.
- இதன்மூலம் நாட்டில் எண்ம பிளவு குறைக்கப்பட்டு நிதி உள்ளடக்கல் வலுப்படுத்தப்பட்டுள்ளது. யுபிஐ பரிவர்த்தனைகளின் அதிகரிப்பு நாட்டின் வளர்ச்சியையும் பிரதிபலிக்கிறது.

» 11 நாடுகளில் யுபிஐ

- ஒரு நாளைக்கு சராசரியாக 66 கோடி பரிவர்த்தனைகள் இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது.
- ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், பூடான், இலங்கை, நேபாளம், சிங்கப்பூர், மோரீஷஸ், கத்தார், கம்போடியா, கிரீஸ் ம ற்றும் மாலத்தீவு ஆகிய 11 நாடுகளில் யுபிஐ செயல்பாட்டில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## 'மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2026' மகுடம் சூடிய கேரள சட்ட மாணவி

- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 'மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2026' அழகி போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் நாடு முழுவதிலும் இருந்து 52 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.
- இதில், கேரளாவைச் சேர்ந்த 19 வயதான சட்டக்கல்லூரி மாணவி கஸியா லிஸ் மெஜோ மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2026 பட்டத்தை வென்று, மகுடம் சூடினார்.
- மேலும், இந்த போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வைஷ்ணவி கணேஷ் 2-ம் இடம் பிடித்தார்.
- குஜராத்தைச் சேர்ந்த அனுஸ்ரீ சதாவ்லேகர் 3-ம் இடம் பிடித்தார். இருவரும் மிஸ் இன்டர்நேஷனல் இந்தியா 2026 பட்டத்தை வென்றனர்.